



# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு

தை - மாசி 2019 சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு இல. 55


# தேசிய விவாதம்

**மஞ்சள் சட்டைப்** போராட்டங்களுக்கு முடிவு காணுவதற்காக பிரான்சில் பாரிய தேசிய விவாதம் (Le Grand Débat National) நடைபெற்று வருகின்றது. இவ்விவாதத்திற்கான முதலாவது அறிவிப்பை டிசம்பர் 18ம் திகதி அதிபர் இம்மனுவல் மக்ரோன் முன்வைத்தார். ஜனவரி 15 முதல் மார்ச் 15 வரை இவ்விவாதம் பிரான்சின் சகல பகுதிகளிலும் நடைபெறும். பிரான்ஸ் நாட்டவர் அனைவரும் இதில் பங்குபற்ற முடியும்.

இவ்விவாதத்திற்காக நான்கு கருப்பொருட்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. சுற்றுச் சூழல் மாற்றங்கள்
2. வரி விதிப்புக்கள்
3. அரச அமைப்பில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள்
4. ஜனநாயகம் மற்றும் குடியுரிமை

நீண்ட காலமாக மக்களின் குரலைக் கேட்க பிரான்ஸ் அரசியல் தலைவர்கள் தவறிவிட்டனர். இக்காரணத்தினாலேயே மக்கள் மிகவும் கோபமடைந்துள்ளனர். ஒவ்வொரு பிரான்ஸ் குடிமகனினதும் குரலை வெளிக்கொண்டுவருவதே இவ்விவாதத்தின் நோக்கம் என விவாதம் தொடர்பாக கருத்துத்தெரிவித்திருக்கிறார் அதிபர் மக்ரோன்.




ஜனவரி 14ம் திகதி "பிரான்ஸ் மக்களுக்கு ஒரு கடிதம்" எனத்தலைப்பிட்டு வெளியிட்ட ஐந்து பக்க அறிக்கையில் இவ்விவாதத்தில் முன் வைக்கப்பட்டுள்ள கருப்பொருட்களின்மீது எத்தகைய விவாதங்களை முன்வைப்பது, விவாதங்களில் எவ்வாறு பங்குபற்றுவது எனப் பல அறிவுறுத்தல்களையும் அவர் மேலும் வழங்கியுள்ளார்.

... தொடர்ச்சி 2 ம் பக்கத்தில்..


நிலா www.nilafrance.com
சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் எல்லாவிதமான கேள்விகளையும் எழுப்பலாம்! எல்லா விதமான கருத்துக்களையும் முன் வைக்கலாம். எதற்கும் தடையில்லை. இது ஜனநாயக நாட்டின் அடிப்படை உரிமை. ஆனால், அரசு எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் என்றோ அல்லது ஏற்றுக்கொள்ளமுடியும் என்றோ எண்ணிவிட முடியாது. ஆனாலும், குறைந்த பட்சம் அதிகாரத்துக்கு எதிராக பேசுவதற்கு விவாதிப்பதற்கு அஞ்சாத மக்கள் நீங்கள் என்பதை நிரூபிக்க முடியும் என அதிபர் மேலும் சூளுரைத்துள்ளார்.



◉ பிரான்சை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக நாம் சரிசெய்த நடவடிக்கைகள் மற்றும் சட்டமாற்றங்கள் போன்றன மறுபரிசீலனை செய்யப்பட மாட்டாது என அறுதியிட்டுக்கூறும் அதிபர். இச்சட்ட மாற்றங்களுள் குறிப்பாக பிரான்சிலுள்ள அதீத செல்வந்தர்கள் மீதான வரிவிலக்கு சட்டமாற்றத்தினை சுட்டுகின்றார். ISF - Impôt de solidarité sur la Fortune எனப்படும் இது தொடர்பான வரி 1981 முதல் பிரான்ஸ் இடதுசாரிகளால் அமுல்படுத்தப்பட்டு 2018 ஜனவரி முதல் அதிபர் இம்மனுவல் மக்ரோனால் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

● குடிவரவாளர் மற்றும் அகதிகள் தொடர்பாக பெரிதும் பேசப்படும் என எதிர்பார்க்கப் பட்டாலும் அதிபரால் முன்வைக்கப்பட்ட கருப்பொருட்களில் நான்காவது புள்ளியான ஜனநாயகம் மற்றும் குடியுரிமையின் கீழ் பின்வரும் ஐந்து புள்ளிகள் அதிபரால் முன் வைக்கப்பட்டுள்ளன.

❍ குடிவரவாளர்கள் தொடர்பாக எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த விரும்புகிறீர்கள்?

❍ புகலிடக் கோரிக்கைக்கான வருடாந்த இலக்குகளை பாராளு மன்றம் முடிவு செய்வதை விரும்புகிறீர்களா?

❍ புகலிட கோரிக்கை தொடர்பான சவாலை பிரான்சில் நடைமுறைப் படுத்த உங்கள் முன் மொழிவுகள் என்ன?

❍ மதசார்பின்மையை எவ்வாறு வலுப்படுத்துவது?

❍ பல்வேறு மக்கள் கூடிவாழும் பிரான்சில் குடியரசின் மதிப்பீடுகளை எவ்வாறு பேணுவது?

மக்கள் குறைவாக வாழும் பகுதிகளில் அந்தந்த பகுதி மாநகர சபைத் தலைவர்களால் பொதுவிவாதங்கள் வழிநடாத்தப்படும். விவாதங்கள் நடாத்தப்படும் இடங்கள் இதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத் தளத்தில் அறிவிக்கப்படும். ஜனவரி 21 முதல் பிரான்ஸ் குடிமக்கள் ஒவ்வொருவரும் தமது கேள்விகளையும் கருத்துக்களையும் https:// granddebat. fr இணையத்தளத்தின் மூலம் பதிவு செய்ய முடியும்.

பிரான்சில் மட்டுமல்லாது பிரான்சின் கடல்கடந்த மாகாணங்கள் மற்றும் பிரான்ஸ் மக்கள் செறிந்து வாழும் வெளிநாடுகளிலும் ஒரு தேர்தல் போன்று ஒருங்கமைக்கப்பட்டுள்ளது.



விவாதங்கள் அனைத்தும் தேசிய விவாத ஆணையகத் தலைவர் Chantal Jouanno தலைமையினாலேயே கண்காணிக்கப்படவிருந்தது. இவர் கருத்து முரண்பாடுகளால் மறுத்துவிட்டமையினால் அதிபரின் அரசிலிருந்து இரு அமைச்சர்கள் ஒருங்கமைப்புச் செய்யவுள்ளனர். ஒருவர் Emmanuelle Wargon சுற்றுச் சூழல் அமைச்சின் அரச காரியதரசி – கட்சி சார்பு அற்றவர். மற்றவர் La République en marche கட்சியைச்சேர்ந்த Sébastien Lecornu பிராந்திய ஆட்சி தொடர் அமைச்சர்



இது ஒரு தேர்தலோ அல்லது ஒரு வாக்கெடுப்போ இல்லை. இது மக்களுக்கும் அரசுக்குமான ஒரு கலந்துரையாடல். உங்கள் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் பிரான்ஸ் குடியரசின் மதிப்புகளை எம்மிடையே மட்டுமல்லாது ஐரோப்பிய மற்றும் சர்வதேச அளவில் வலுப்படுத்துபவையாக அமையும் என எதிர்பார்க்கிறேன் என்கிறார் அதிபர் இமனுவல் மக்ரோன். •






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ்:

# 2019 ஜனவரி முதல் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் :



**ஒவ்வொரு** வருட ஆரம்பங்கள் போல் 2019ம் ஆண்டும் பல மாற்றங்களுடன் ஆரம்பமாகியுள்ளது.

SMIC
Salaire Minimum de Croissance

● ஜனவரி 1ம் திகதி முதல் அடிப்படை சம்பளமான (SMIC) 1.5 சதவீத உயர்வைப் பெறுகின்றது.
ஒரு மணிநேரத்திற்கு 9.88 யூரோவிலிருந்து 10.03 யூரோவாக உயர்வு பெறுகின்றது. 35 மணிநேர வேலைக்கு மாதாந்த வருமானமாக 1521.22 யூரோக்களாக மாறுகின்றது.

● ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதத்திற்கு 2000 யூரோவிற்கு குறைவாக ஓய்வூதியம் பெறுவோருக்கு அரசால் அறிவிக்கப்பட்ட சமூக அறவீடு உயர்வு விலக்கப் பட்டுள்ளது. இம்மாற்றம் முதல் 6 மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படாது. எனினும் 6 மாதங்களுக்கு பின்னர் கூடுதலாக அறவிடப்பட்ட தொகை மீள வழங்கப்படும்.



இவ்விரண்டு மாற்றங்களும் «Gilets Jaunes» புரட்சிகளுக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

● முதியவர்களுக்கான சமூக கொடுப்பனவுகள் (ASPA) Allocation de solidarité aux personnes âgées 35 யூரோவால் உயர்ந்து 826.20 யூரோவாக மாற்றம் பெற்றுள்ளது

● வீட்டு வரி (Taxe d'habitation) அதிபர் மக்ரோனால் அறிவிக்கப்பட்டது போன்று இந்தவருடமும் 30 சதவீத கழிவு கிடைக்கப்பெறவுள்ளது. 2020ம் ஆண்டில் முற்றிலுமாக இல்லாமல் போகும்.

● வேலை நேரத்தை விட கூடுதல் நேரம் வேலை செய்தால் (Overtime) கிடைக்கும் கூடுதல் ஊதியத்திற்கு எந்தவித வரிகளும் செலுத்தத் தேவையில்லை. இம்மாற்றம் செப்டெம்பர் 2019 முதலே அமுல்படுத்தப்படவிருந்தது மஞ்சள் சட்டை போராட்டங்களால் ஜனவரி முதல் அமுலுக்கு வருகின்றது. இம்மாற்றம் அரச மற்றும் தனி யார் ஊழியர்கள் என அனைவருக்கும் பொருந்தும்.

● வருமானவரி : அனைத்து ஊதியம் பெறுவோருக்கும் வருமானவரி அந்தந்த மாதமே அவர்களுடைய அந்த மாதத்திற்கான சம்பளத்திலிருந்து நேரடியாக எடுக்கப்படும்.

● எரிவாயு விலை 1.9 சதவீதத்தால் குறையவுள்ளது. சமையலுக்காக மட்டும் எரிவாயுவை உபயோகிப்போருக்கு 0.6 சதவீதமும், சமையலுக்கும் சுடுதண்ணீருக்கும் உபயோகிப்போருக்கு 1.2 சதவீதமும், சமையல், சுடுதண்ணீர் மற்றும் வெப்பமூட்டிக்காக எரிவாயுவை உபயோகிப்போர் 2 சதவீத விலைக்குறைப்பையும் பெறவுள்ளனர். எரி–வாயு டிசம்பர் மாதத்தில் 2.4 சதவீத விலைக்குறைப்பைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விலைக்குறைப்புகள் அனைத்தும் நவம்பரில் 5.8 சதவீத உயர்வு, ஒக்டோபர் 3.25 சதவீத உயர்வு, செப்டெம்பர் 0.9 சதவீத உயர்வுகளுக்குப் பின்னர் போரா டிப் பெறப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

● 2019ல் மின்சாரக்கட்டணங்கள் பாரிஸ் வாழ் மக்களுக்கு 2.3 சதவீத உயர்வை எட்டுகின்றது.

● பிரான்சில் பல ஆயிரம் வாகனங்கள் காப்பீடுகளின்றி (Assurance) பாவனையில் உள்ளனவாம்.
இதுவரையிலும் இல்லாதவாறு பிரான்ஸ் காவல் துறையினருக்கு காப்பீட்டு நிறுவனங்களின் முகவர் கணக்குகளை கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.
காப்பீடு செய்யப்படாத வாகனம் 3750 யூரோ வரையான அபராதம் பெற வாய்ப்புள்ளது. இன்னும் கூடுதலாக வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டு வாகன ஓட்டுனர் உரிமமும் பறிமுதல் செய்யப்பட வாய்ப்புண்டு

● புகைப்பிடிப்பவர்களுக்கு : 2018ம் ஆண்டில் இரண்டு முறை விலையுயர்வைப் பெற்ற சிகரெட் பக்கற்றுகள் 2019ம் ஆண்டில் ஏப்ரலிலும், நவம்பரிலும் இரண்டு முறை விலையுயர்வைப் பெறவுள்ளன. ஒவ்வொரு முறையும் 0.50 யூரோவால் விலையுயர்வு பெறும்.

● தபால் முத்திரைகள் : அடிப்படை முத்திரையின் விலை 10 சதவீத உயர்வைச் சந்திக்கின்றது.




இவை தவிர பிரான்சில் 2019ம் ஆண்டில் சம்பளங்கள் 1.5 முதல் 2.5 சதவீதமான உயர்வை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன என Deloitte ஆய்வகம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# LUNDI VERT

**பிரான்சில்** புதிய அறிவிப்பு ஒன்றை 500 பிரபலங்கள் இணைந்து வெளியிட்டுள்ளனர். வாராவாரம் ஒவ்வொருதிங்கட்கிழமையும் மாமிசம் மீன் எதுவுமில்லாமல் மரக்கறி உணவுகளை மட்டும் உண்ண அழைப்பு விடுத்துள்ளனர். பிரான்ஸ் மக்களின் உணவு முறைகளில் நிச்சயம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இம்மாற்றத்தின் மூலம் பிரான்சில் அதிகரித்து வரும் மாமிச நுகர்வைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியும். மாமிச நுகர்வை கட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம் மாமிசத்துக்காக பெருந்தொகையாக வளர்க்கப்படும் விலங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். இதன் மூலம் பூமிப்பந்தின் ஆரோக் கியத்திற்கும் மனிதர்களின் ஆரோக் கியத்திற்கும் வழி கோல முடியும் என CNRS (பிரான்சில் அறிவியல் ஆராய்ச்சி தேசிய மையம்) தெரிவித் துள்ளது. இத்தகைய திட்டம் பல நாடுகளில் செயற்பாட்டில் உள்ளது எனவும், தற்போது 40 நாடுகளில் இத்திட்டம் முன்வைக்கப்பட்டுள் ளது எனவும் ஆய்வகம் குறிப்பிட் டுள்ளது.

Lundi vert அழைப்பிற்கு உலகெங்கும் பலமான ஆதரவு ஏற்பட்டு வருகின்றது.



## குற்றப் பணம் அதிகரிப்பு!

சிகரட்டின் அடிக்கட்டைகளை வீதிகளில் எறிபவர்களுக்கான குற்றப் பணத்தை கிட்டத்தட்ட இரு மடங்காக்கியுள்ளதாக பரிஸ் மாநகர சபை அறிவிக்கிறது. அதாவது 35€ இல் இருந்து 68€ வாக. பரிஸுக்குள் நூற்றிற்கும் மேலான சுகாதாரக் கண்காணிப்பாளர்கள் ஒழுங்கீனமான புகைப்பிடிப்பாளர்கள் மீது நீண்ட காலமாக குற்றப்பணம் விதிக்கிறார்கள்.

பரிஸுக்குள் மட்டும் 350 தொன் அளவிலான சிகரட் அடிக்கட்டைகள் வருடாந்தம் சேர்கின்றன. இக் கட்டைகளின் தீயை அணைப்பதற்கும் அவற்றை உரிய முறையில் சேகரிப் பதற்குமான விஷேட குப்பைத் தொட்டிகள் பரிஸுக்குள் மட்டும் 30 ஆயிரம் நிறுவப்பட்டுள்ளன.

புகைபிடித்தலுக்கு அடிமையாளவர்கள் அதனை நிறுத்துவதற்குப் பாவிக்கும் சில மருந்து வகைகளுக்குச் செலுத்தும் தொகையில் 65%ஐ இனி 'Sécurité sociale' வழங்கப் போவதாக அறிவிக்கிறது.

- Luxman Vithyah









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாரிஸ் மாநகருக்கான புதிய திட்டங்கள்..

பாரிஸ் மாநகர மேயர் ஆன் ஹிடல்கோ வருடாந்த வாழ்த்துச் செய்தியை ஜனவரி 10ம் திகதி வெளியிட்டதோடு. பாரிஸ் மாநகருக்கான புதிய எதிர்காலத்திட்டங்களையும் அறிவித்துள்ளார். அவற்றில் சில.

● **11 வயதுக்கு குறைவானவர்களுக்கு பொதுப் போக்குவரத்து முற்றிலும் இலவசம்.**
தற்போது 4 வயது வரையே இலவசமாகும்.
○ 20 வயதுக்குக் குறைந்த அனைத்து ஊனமுற்றோர்க்கும் பொதுப் போக்குவரத்து இலவசம்.
○ Collége மற்றும் Lycée மாணவர்களுக்கு 50 சதவீதம்வரை விலைக்கழிவையும் அறிவித்துள்ளார்.
இதன் மூலம் ஒரு மாணவர் வருடத்துக்கு 175 யூரோ வரை சேமிக்க முடியும்.

● **14 முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கு Vélib சந்தா இலவசம்.**
இவ்வறிவிப்புகள் செப்டம்பர் 2019 முதல் அமுலுக்கு வரும்.

● **பாரிஸ் நகரில் வாகனப் போக்குவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவருதல்.**
இதன் மூலம் வாகனப்புகை வெளியேற்றத்தைக் குறைத்து சூழல் மாசடைவைக் குறைத்தல்.

● **துவிச்சக்கரவண்டிப் பாவனையை ஊக்குவித்தல்.**
பாரிஸ் நகரில் துவிச்சக்கரப் பாதைகளை அதிகரித்தல். பாதுகாப்பான Vélo Boxes தரிப்பிடங்களை நிர்மாணித்தல். இன்னும் மின்சார துவிச்சக்கர வண்டிகள் வாங்குவதற்கான நிதி உதவி எனத் திட்டங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

● மாதத்தில் முதல் ஞாயிறு Champs Elysées பாதசாரிகளுக் கானது. அதேபோன்று மாதத்தின் வாரஇறுதி நாட்களுள் ஒன்று பாரிசின் முதல் நான்கு அலகுப்பகுதி (பாரிஸ்1, 2, 3, 4) பாதசாரிகளுக்குமானதாகும்.

○ இன்னும் பாரிசின் ஒவ்வொரு நிர்வாக அலகுப்பகுதிக்கும் (75001 முதல் 75020 வரை) ஒரு வீதி சிறுவர்களுக்கானதாகும். அங்கு வாகனப் போக்குவரத்து முற்றிலும் தடைவிதிக்கப்பட்டு வீதியில் சிறுவர்களுக்கான பல விளையாட்டுக்கள் நிறுவப்படவுள்ளன.



## வன்முறையில் ஈடுபடும் மாணவர் குடும்பங்களுக்கான சமூகக் கொடுப்பனவு இரத்துச்செய்யப்படும்!

பாடசாலைகளில் அதிகளவு வன்முறையில் ஈடுபடும் மாணவர்களின் குடும்பங்களுக்கான சமூகக்கொடுப் பனவை ரத்துச் செய்யும் திட்டத்தை கல்வித் துறை அமைச்சர் Jean - Michel Blanquer முன்வைக்கவுள்ளார்.

நீண்டகாலமாக பேச்சுவார்த்தையில் இருக்கும் இத் திட்டம் அமுலுக்கு வருவதற்கான இறுதிக் கோப்புகள் ஜனவரி இறுதியில் பாராளுமன்றத்துக்கு வரவுள்ளன.

தொடர்ந்து பாடசாலைகளுக்கு வருகை தராமை மற்றும் வன்முறையாளர்களை கல்வியகங்கள் ( Collége மற்றும் நிர்வாகங்கள்) Allocations Familiales க்கு அடையாளம் காட்டும் பட்சத்தில் அக் குடும்பத்துக்கான கொடுப்பனவு நிறுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். சூழ்நிலையின் தீவிரத்தன்மையை குடும்பத்தினர் உணர வேண்டும். தமது குழந்தைகள் சமூகத்தில் விளைவிக்கும் செயற்பாடுகளால் பாடசாலைக்கோ அல்லது சக மாணவனுக்கோ ஏற்படுத்தும் தாக்கங்களை அவர்களும் அறிய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



அண்மையில் Créteil பாடசாலையில் ஒரு ஆசிரியர் Lycée மாணவனால் தாக்கப்பட்ட பின்னர் பாட–சாலை பாதுகாப்புக்கள் தொடர்பான விவாதங்கள் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு என உட்துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்ட திட்டம் நீதித்துறை அமைச்சரின் எதிர்ப்புக்குப்பின்னர் ஒத்திவைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.


தன் சுயபலத்தில் நிற்பவனே சுதந்திரமானவன்

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய இணைய முகவரி
thiruvenkadumandaitivu.com



தீவக செய்திகளை அறிய.. www.Allaiyoor.com

பிரான்ஸ்
திருமறைக்கலாமன்றத்தின்
திருப்பாடுகளின் காட்சி
7. 4. 2019
3, rue Firmini Gémier
93300 Aubervilliers

மன்னார் மாவட்ட அபிவிருத்தி அமைப்பு
(பிரான்ஸ்)
ஆண்டுவிழா
5. 5.2019
ஒப்புரவு அன்னை ஆலயம்
57, Bd. de Belleville - 75011 Paris
(M°: Belleville)

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களாக வேலையை விட்டாலும் Chômages பெறமுடியும். ஆனால்,...




பிரான்சில் இன்றுவரை ஒரு தொழிலாளர் தானாக வேலையைவிட்டு நின்றால் எக்காரணம் கொண்டும் Chômages பெறமுடியாது. 2019 புதிய மாற்றங்களின் படி எதிர்கால தொழில் சட்டத்தின் அடிப்படையில் Chômages ஐ பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என Pôle emploi தெரிவித்துள்ளது.

ஒருவர் வேலையை விட்டு நிற்கிறார் என்றால் சரியான காரணம் காட்டவேண்டும். எதிர்காலத்தில் புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்குவதான திட்டம் அல்லது தனது தொழில் சார் மறுசீரமைப்பு தொடர்பான திட்டம் ஒன்றை கைவசம் வைத்திருக்க வேண்டும். Pôle emploi அவரது திட்டத்தினைப் பரிசீலனை செய்து அவரது புதிய நகர்வு வரையான காலத்துக்கு வேலையின்மை உதவித் தொகையை வழங்கும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் பொய்யானது என்றோ அல்லது தொழில் மாற்றத்துக்கான எந்தவொரு முயற்சிகளையோ அவர் எடுக்காவிடின் தண்டனைகள் கடுமையாகவிருக்கும் எனவும் கொடுக்கப்பட்ட Chômages மீண்டும் Pôle emploi வுக்கு செலுத்த நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இந்தியாவில் தயாராகவுள்ள Iphone

2019 முதல் புதிய Iphone கள் இந்தியாவில் தயாரிக்கப்படவுள்ளன என Apple நிறுவனம் தெரிவித்துள்ளது. வரவிருக்கும் ஐபோன்களை இந்தியாவில் தயாரிப்பதன் மூலம் பாரிய அளவு சேமிப்பை ஏற்படுத்த முடியும் எனவும் இந்தியாவில் பொருளாதார மற்றும் தொழில் ரீதியாக சிறிய மாற்றத்தையாவது ஏற்படுத்த முடியும் எனவும் Apple நிறுவனம் தெரிவித்துள்ளது.

312 மில்லியன் யூரோக்கள் முதலீடு செய்யப்படவுள்ளது. 25ஆயிரம் வேலை வாய்ப்புக்களும் கிடைக்கவுள்ளன. வெவ்வேறு நாடுகளிலிருந்து தயாரிக்கப்பட்டு கூறாக வரும் பொருட்களை ஒன்றாக இணைத்து ஐபோனாக மாற்றுவதே இந்தியாவில் நடைபெற வுள்ளது. Foxconn எனப்படும் தாய்வான் நிறுவனமே தயாரிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளது.

தயாரிப்புத் தொழிற்சாலை சென்னைக்கு அருகாமையில் சிறீபெரும்புத்தூரில் அமைந்து ள்ளது. தொழிற்சாலையைப் பெருப்பித்து ஐபோன் தயாரிப்புக்கு ஏற்றவகையில் மாற்றுவதற்கு மட்டும் 25 மில்லியார்ட் ரூபாய்கள் செலவிடப் படவுள்ளன.

இருப்பினும் ஐபோன்கள் இந்தியாவில் தயா ராவது இது ஒன்றும் முதற் தடவை இல்லை. வெவ்வேறு தொழில் நிறுவனங்கள் Iphone SE, 6S இன்னும் Iphone 8 கூட இந்தியாவில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஐபோன்களின் விலை மற்றைய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் விலையை விட இந்தியாவில் குறைவாகும். இந்தியாவில் தொலைபேசி வாங்குவோர்களின் எண்ணிக்கையும் வெகு வாக அதிகரித்து வருகின்றது.

இவற்றையெல்லாம் விட இந்தியாவில் Iphone தயாரிப்பிற்கு ஒரு தொழிலாளிக்கான சம்பளம் மற்றைய அனைத்து நாடுகளையும் விட மிகவும் குறைவானது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இந்த வருடம் பிரான்ஸ் அதிபரின் வாழ்த்துச் செய்தி இல்லை!

வருடா வருடம் இடம்பெறும் பிரான்ஸ் அதிபரின் வாழ்த்துச் செய்தி இந்த வருடம் இடம்பெறவில்லை.

பாரம்பரியமாக நடைபெற்றுவரும் இவ்வாழ்த்துச் செய்தி நிகழ்வு இடம்பெறாமைக்கு பிரான்சில் நடை பெற்றுவரும் "மஞ்சள்சட்டை "போராட்டங்களும், இப்போராட் டங்களால் அதிபர் இம்மனுவல் மக்ரோனால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய விவாதமும் (le grand débat national) முக்கிய காரணங்களாகும்.

மஞ்சள் சட்டைப் போராட்டங்களுக்கு முடிவு காணுவதற்காக போராட்டக் காரர்களின் கருத்துக்களை முன்வைத்து தேசிய விவாதம் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் நான் பிரான்ஸ் மக்களுக்கு வேறெந்த வாக்குறுதிகளையும் கொடுக்க விரும்பவில்லை என அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஒரு நிகழ்வு பிரான்சில் முதல் முறையாகும். இருப்பினும் அதிபர் தனது வருடாந்த வாழ்த்துச் செய்தியை இராணுவ வீரர்களுக்கு மட்டும் வழங்கியுள்ளார். இந்நிகழ்வு துளுசில் அமைந்துள்ள Francazal இராணுவத்தளத்தில் 600 இராணுவ த்தினருக்கு முன்னிலையில் இராணு வத்துறை அமைச்சர் Florence Parly ஒருங்கமைப்பால் நடைபெற்றுள்ளது.






இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புகை பிடிப்போர் தொகை குறைகிறது..!

பிரான்சில் புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் 2018ம் ஆண்டில் 40, 23 மில்லியார்ட் சிகரட்டுக்கள் விற்பனைக்காக Tabac க்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 2017ம் ஆண்டில் இத்தொகை 44, 36 மில்லியார்ட்டாக இருந்தது. 2018ல் 9, 32 சதவீதத்தால் சிகரட் விற்பனை குறைந்துள்ளது. 2017ல் 2016ஐ விட 5, 66 சதவீதம் குறைவாகவிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் மக்கள் தமது உடல் நலம் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர் என சுவாச நோய்கள் தொடர் மருத்துவர் Bértrand Dautzenberg மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைவதற்கான முக்கிய காரணங்களாக,

- அதிகரித்துவரும் சிகரட்டின் விலை. தற்போது 8 யூரோ வரை உயர்வு பெற்றுள்ளது. 2020ம் ஆண்டில் 1 பக்கட் சிகரட்டின் விலை 10 யூரோவாக மாற்றம் பெறும்.

- எந்தவித இலச்சினைகளோ, அழகியலோ இல்லாது சுவாச நோய்களால் தாக்கப்பட்டவர்களின் புகைப்படங்களுடன் அச்சிடப்படும் சிகரட் பெட்டிகள். இது இளையவர்கள் மத்தியில் வெகுவாகக் கவர்ச்சியை இழக்கக் காரணமாகும். இத்தகைய சிகரட் பெட்டிகளைப் பார்க்கும் போது புகைப்பதற்கான "மூட்" இல்லாமல் போகிறதாம்!

**வருடா வருடம் புகை பிடிப்பதனால் பிரான்சில் 75 ஆயிரம் பேர்வரை உயிர் இழக்கின்றனர்.**

உலகிலேயே சிகரட் பக்கட்டின் விலை அவுஸ்திரேலியாவிலேயே அதிகமாகும். ஒரு பெட்டி சிகரட்டின் விலை 13, 6 யூரோக்களாகும்.

## காப்பீடு இல்லாத வாகனங்கள் தானியங்கி முறையில் சோதனை




அதிக வேகத்தில் வாகனத்தை ஓட்டி செல்லும் போது தானியங்கி ரேடார் மூலம் படம் எடுக்கப்பட்டு அபராதம் வீட்டிற்கு அனுப்பப்படும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. இவ்வாறு ரேடார் படம் எடுக்கப்பட்டதும் தானியங்கி முறையில் வாகனத்திற்கு காப்பீடு பதிவு செய்யப்பட்டுள்ளதா என சோதனை செய்யப்படும்.

இதற்காக காவல் துறை, காப்பீடு நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைப்பு கணினி கோப்பு (le fichier des voitures assurés) உருவாக்கியுள்ளது. இதன் மூலம் உடனடியாக வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என சோதிக்கப்படும். இல்லாத பட்சத்தில் அபராதம் கூடுதலாக விதிக்கப்படும்.



## ஜனவரி 16ல் 'மஞ்சள் சட்டை' போராட்டக்காரர் வெளியிட்ட நீண்ட கோரிக்கைகளுள் சில..

- வதிவிடமற்றோர் (SDF) என்று எவரும் இருக்கக்கூடாது.
- ஆக்ககுறைந்த அடிப்படைச்சம்பளம் 1300 யூரோவாக இருத்தல் வேண்டும். (Net)
- எரிபொருள் விலையேற்றம் நிறுத்தப்பட வேண்டும்.
- குறைந்த பட்ச ஓய்வூதியம் 1200 யூரோ
- பொதுமக்கள், கைத்தொழிலாளர்கள், சுயதொழில் நிறுவனங்கள், விவசாயிகள் என அனைவருக்கும் Sécurité Social காப்பீட்டு முறை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.
- அதிஉயர் சம்பளம் 15, 000 யூரோவாக மட்டுப்படுத்த வேண்டும்.
- பாராளுமன்ற உறுப்பினரோ, அரச பணியாளரோ அவர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்துச் செலவு, Ticket ரெஸ்ட்ரோன்ட், விடுமுறை செலவீனங்கள் கண்காணிக்கப்பட வேண்டும்.
- பிரான்ஸ் தொழில் நிறுவனங்களை சிறு தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டும். உலகமயமாக்கலால் பிரான்சுக்குள் நுழையும் பெரு நிறுவனங்களை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.
- கட்டாயக் குடிவரவு தொடர்பான அடிப்படைக் காரணங்களை கண்டறிந்து அந்ததந்த நாடுகளுடன் இணைந்து தீர்வுகள் காணவேண்டும்.
- புகலிடம் கோருவோர் சரியான முறையில் கவனிக்கப்பட வேண்டும். உறைவிடம், உணவு, கல்வி நிச்சயம் கொடுக்க வேண்டும். ஐநாவுடன் இணைந்து சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- ஊனமுற்றோருக்கான கொடுப்பனவு அதிகரிக்க வேண்டும்.
- பிரான்சின் சொத்துக்களை வெளிநாடுகளிடம் விற்பதை நிறுத்த வேண்டும். குறிப்பாக விமான நிலையங்கள்.
- வருமான வரியை நேரடியாக சம்பளத்திலிருந்து எடுக்கும் (Prélevement à la Source) முறையை நிறுத்த வேண்டும்.
- பிரான்ஸ் முன்னாள் அதிபர்களுக்கான வாழ்க்கை இறுதி–வரையாக வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் கூடுதல் சலுகைகளை நிறுத்த வேண்டும்.
- ஓய்வூதியம் பெறும் வயது 60 ஆக மாற்ற வேண்டும். கடின வேலை புரிவோருக்கு 55 வயதாக மாற்ற வேண்டும்.
- Carte Bleue மூலம் ஒரு நுகர்வாளர் பணம் செலுத்தும் போது பணம் பெறும் வர்த்தக நிறுவனத்திடம் வங்கியால் பெறப்படும் கூடுதல் வரியை நிறுத்த வேண்டும்.
- பாடசாலைகளில் ஆரம்ப பாடசாலை முதல் மேல்நிலை வரை ஒரு வகுப்பில் ஆகக்கூடியதாக 25 மாணவர்கள் மட்டுமே.
- வீட்டு வாடகைகளை மட்டுப்படுத்தல்.
- பிரான்ஸ் தனது கடன்களுக்காக செலுத்தும் வட்டியை நிறுத்தி முதலில் முதலை செலுத்தி முடிக்க வேண்டும். ஏழை மக்கள் மீது மீண்டும் மீண்டும் கடனைச் சுமத்தி வரியை அறவிடாமல், வரி செலுத்தாது பதுக்கப்பட்டுள்ள 80 மில்லியார்ட் யூரோக்களிலிருந்து வரியை அறவிட்டு முதலைச் செலுத்தி முடிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தை மதிக்காத தலைமைகளுடன் வர்த்தக உடன்படிக்கை இல்லை

**- மக்ரோன்**

ஆஜன்டீனா ஜனாதிபதி மவுரிஸியோ மக்ரி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மக்ரோன் ஆகியோருக்கிடையில் ஜி20 மாநாட்டுக்கு முன்னதாக விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட மக்ரோன், "பாரிஸ் காலநிலை உடன்படிக்கையில் பிரேசில் நாட்டின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜயர் போல்ஸனாரோவின் பங்கு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஆர்ஜென்டினா, பிரேசில், பராகுவே மற்றும் உருகுவே ஆகியவற்றிற்கும் இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் ஒரு முரண்பாட்டை ஏற்படுத்தும்" என்று குறிப்பிட்டார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி பதவியேற்றுள்ள போல்ஸனாரோ, அமெரிக்க ஜனாதிபதியின் தீவிரபின்பற்றாளர் என்பதுடன், சூட்சுமமான பிரதிபலிப் பாளர் ஆவார்.

அவர் அமெரிக்க ஜனாதிபதியின் தலைமைத் துவத்தை பின்தொடர்வதுடன், அதிகாரத்தை பொறுப்பேற்கும் தருணத்தில் பாரிஸின் காலநிலை ஒப்பந்தத்திலிருந்து பிரேசில் நாட்டை திரும்பப் பெறுவதற்கும் வாய்ப்புள்ளது.

அத்துடன், பாரிஸ் ஒப்பந்தத்தை மதிக்காத அதிகாரங்களுடன் பாரிய வர்த்தக உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவதற்கு தனக்கு விருப்பம் இல்லை என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன், ஆஜன்டீனா ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.



## பிரான்சின் சிறந்த உயர்நிலைப் பாடசாலைகள்



பிரான்சின் சிறந்த உயர்நிலைப் பாடசாலை களின் (Lycées) தரவரிசை கல்வித்துறை யினரால் வெளியிடப் பட்டுள்ளது.

இத்தர வரிசை 2018ம் ஆண்டு Bac பரீட்சை எழுதிய 7 53 000 மாணவர்களின் அடிப்படை யில் கணக்கிடப்பட்டுள்ளது. குறிப்பாக Bac பரீட்சையில் சித்தியடைந்தோரில் trés bien தகமை பெற்றோர்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவாகியுள்ள முதல் 19 Lycéesகளில் trés bien தகமை பெற்றோரின் எண்ணிக்கை 50 சதவீதத்துக்கும் அதிகமாகும். இந்த நிலை பிரான்சில் 1990ம் ஆண்டுகளில் வெறும் 0.8 சதவீதமாகவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

trés bien தகமை பெற்ற ஒரு மாணவன் சராசரியாக 16 புள்ளிகள் அல்லது 16 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருக்க வேண்டும். தரவரிசையில் முதல் 19 லிசேகளில் 15 லிசேகள் தனியார் லிசேகளாகும். முதலாவது இடம் வகிக்கும் பாரிசில் அமைந்துள்ள Lycée Prive Sant - Louis de Gonzague (Franklin) 84.4 சதவீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் trés bien தகமை பெற்று சித்தியடைந்துள்ளனர். முதல் 5 லிசேகளில் 72 க்கும் அதிகமானோர் trés bien பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தனியார் இல்லாதபொது உயர்நிலைப் பாடசாலைகளில் 5வது இடத்தை பாரிஸ் 5ல் அமைந்துள்ள Lycée General Henri IV 72.9 சதவீத trés bien தகமையாளர்களுடன் தக்கவைத்துள்ளது.

| Rang | Nom du lycée | Ville | % mentions TB | Taux de réussite | Académie |
|---|---|---|---|---|---|
| 1 | Lycée privé St-Louis de Gonzague | Paris | 83,4% | 100,0% | Paris |
| 2 | Lycée privé Madeleine Danielou | Rueil-Malmaison | 74,9% | 100,0% | Versailles |
| 3 | Lycée privé Stanislas | Paris | 74,4% | 100,0% | Paris |
| 4 | Lycée Sainte Marie de Neuilly | Neuilly-sur-Seine | 73,6% | 100,0% | Versailles |
| 5 | Lycée General Henri IV | Paris | 72,9% | 99,7% | Paris |
| 6 | Maison d'éd. de la Légion d'honneur | St-Denis | 68,9% | 100,0% | Creteil |
| 7 | Lycee General Louis Le Grand | Paris | 67,2% | 100,0% | Paris |
| 8 | Lycée privé Saint-Jean de Passy | Paris | 64,9% | 100,0% | Paris |
| 9 | Lycee General Condorcet | Paris | 63,5% | 100,0% | Paris |
| 10 | Lycee Gen Prive Ecole Active Bilingue J.Manuel | Paris | 56,3% | 100,0% | Paris |


பிரான்ஸ் தமிழர் முகவரி 2020

தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
01.44.72.08.94

இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வாகன உரிமம் மற்றும் வாகனக்காப்பீட்டினை நீங்கள் எடுத்துச்செல்ல மறந்தால்..

வாகன ஓட்டி வாகனத்தை ஓட்டிச்செல்லும் போது போக்குவரத்து சோதனையின் சமயத்தில் வாகன உரிமத்தை (le permis de conduire) மறந்து விட்டால் அனுப்பப்படும் அபராதத்தை இணையதளத்தில் முறையீடு செய்து ரத்து செய்யக்கேட்கலாம்.

அதே போல் புதிய வாகன காப்பீடு வில்லையை (vi-gnette assurance) வாகனத்தின் முன் கண்ணாடியில் மாற்றாமல் காலாவதியான காப்பீடு வில்லையை வைத்திருந்து அதனால் அபராதம் விதிக்கப்பட்டாலும் அதனை இணையத்தளத்தின் மூலம் முறையீடு செய்து ரத்து செய்ய கேட்கலாம்.

இதற்கான இணையதளம் : https://www.usagers.antai.gouv.fr/demarches/saisienumero?lang=fr

## குறைகாணும் மனது அமைதியாய் இருப்பதில்லை ..

## ஓய்வூதியம் பெறுபவர்கள் வேலை செய்யலாமா?

ஓய்வூதிய வயதான 62 வயதை அடைந்தவர்கள் பிரான்சில் வேலை செய்த ஆண்டுகள், பெற்ற சம்பளம் போன்றவற்றை பொறுத்து ஓய்வூதியம் பெறலாம்.

இவ்வாறு ஓய்வூதியம் பெறும் காலத்தில் புதிதாக வேலை ஒன்றில் இணையலாமா? இதனால் ஓய்வூதியம் குறைக்கப்படுமா ? என்ற கேள்விகள் பலரிடமும் உண்டு.

பதில் :
ஓய்வூதியம் பெறுபவர் புதிதாக வேலை செய்யலாம். ஆனால் அவர் பெறும் ஓய்வூதியம் மற்றும் சம்பளத்தையும் கூட்டி பார்த்தால் பெறுவதற்கு முன்பு செய்த வேலையின் கடைசி மூன்று மாத சராசரி சம்பளத்தை தாண்டக்கூடாது.

உதாரணத்திற்கு ஓய்வூதியம் ஒருவர் பெறுவதற்கு முன்பாக மாதம் 1500€ என சம்பளம் பெற்றார். தற்போது இவர் 1100€ (அடிப்படை மற்றும் கூடுதல் ஓய்வூதியம்) பெறுகிறார். எனவே இவர் மாதம் அதிகபட்சமாக புதிதாக ஒரு வேலையில் 400€ வரை சம்பாதித்தால் இவருக்கு ஓய்வூதியத்தில் எந்த கழிப்பும் இருக்காது.



## ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை செய்யப்பட்டுள்ள விமான நிறுவனங்கள்

ஐரோப்பிய ஒன்றியத்தில் விமான சேவை செய்ய 115 விமான நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 15 நாடுகளைச் சேர்ந்த இந்த நிறுவனங்களின் விமானங்களில் பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் உள்ள அநேக விமான நிறுவனங்கள் ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவை.

ஐரோப்பாவில் இருந்து கிளம்பி வேறு நாட்டிற்கு சென்று அங்கிருந்து மாற்று விமானம் எடுப்பவர்கள் மேற்கண்ட விமான நிறுவன விமானங்களையிட்டு எச்சரிக்கையாக இருக்கவும்.

*Au total, 115 compagnies aériennes sont concernées. 109 compagnies appartenant aux 15 États suivants : Afghanistan ; Angola (à l'exception d'1 compagnie qui opère sous restrictions d'exploitation) ; Djibouti ; Érythrée ; Gabon (à l'exception de 2 compagnies qui opèrent sous restrictions d'exploitation) ; Guinée équatoriale ; Liberia ; Libye ; Népal ; République démocratique du Congo ; République du Congo ; République kirghize ; São Tomé et Príncipe ; Sierra Leone ; Soudan.*



**மஞ்சள் ஆடைப் போராட்ட வன்முறையைத் தொடர்ந்து அவசர அவசரமாகப் புதிய சட்டமூலம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**

பிரதமர் Edouard Philippe அவர்களால் அறிவிக்கப்பட்ட இச்சட்டமூலமானது போராட்டங்களின் போது வன்முறையில் ஈடுபடுபவர்கள் மற்றும் உரியமுறையில் அனுமதி பெறாமல் நடாத்தப்படும் போராட்டங்களை தண்டிப்பதற்கானதாகும்.

29 ஜனவரி பாராளுமன்ற விவாதத்துக்குப் பின்னர் சட்டமூலம் மூலம் வன்முறையாளர்கள் மற்றும் போராட்டக்காரர்களின் மீதான வீடியோ கண்காணிப்பைக் காவல்துறையினர் மேற்கொள்ள முடியும். வன்முறைவாதி என ஒருவர் இனங்காணப்பட்டால் அவரை எந்தவித வீதிப்போராட்டங்களிலும் கலந்து விடாமல் தடுக்கவும் முடியும்.

உரக்கப் பேசுவதும் வன்முறையா? இது போராட்ட மரபுகளில் முக்கியமான குணமாகும். பொது மக்கள் வீதியில் இறங்கி ஒரு அரசை எதிர்த்துப் போராடுவதை எக்காரணம் கொண்டும் தடுக்கக்கூடாது. இது அவர்களின் உரிமை. அதேநேரம் வன்முறை மற்றும் கடை உடைப்புகளில் ஈடுபடுபவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது அரசின் கடமை. என இச்சட்டமூலத்துக்கு எதிர்ப்பை நீதித்துறை அமைச்சர் Nicole Belloubet பதிவு செய்துள்ளார்.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மொழி பெயர்ப்பு**
V.S. Krishnapillai
**(மாயவர்)**
Tél.: 06.86.38.10.57

7, Rue Perdonnet - 75010 Paris (1ம் மாடி)
M°: La Chapelle / Gare du Nord




**EGLISE EVANGELIQUE DE SION**
**சீயோன் சுவிசேஷ சபை**

சபை ஆராதனை நடைபெறும் இடங்கள்
LES LIEUX DE CULTES

**இடம் : VIRY - CHATILLON**
16, RUE DE RIS 91170 VIRY - CHATILLON
RER-D :- VIRY - CHATILLON
TEL. :- 06.51.12.65.85 / 06.58.33.65.13 / 06.61.18.95.30
ஞாயிறு மாலை 3.00 மணிக்கு தமிழ் ஆராதனை

**இடம் : NOISY - LE - GRAND**
19A, RUE DE L'UNIVERSITÉ 93160 NOISY - LE - GRAND
RER - A :- NOISY - LE - GRAND
TEL. :- 06.03.79.58.02 / 06.61.18.95.30
ஞாயிறு மாலை 3.00 மணிக்கு தமிழ் ஆராதனை

**இடம் : GIEN**
33, AVENUE JEAN VILLEJEAN - GIEN 45500
TEL. :- 02.38.67.80.72 / 06.03.79.58.02 / 06.61.18.95.30
ஞாயிறு காலை 9.30 மணிக்கு தமிழ் ஆராதனை

**இடம் : GARGES - LES - GONESSE (SARCELLES)**
2, BOULEVARD DE LA MUETTE 95140 GARGES - LES - GONESSE
RER-D :- GARGES - SARCELLES
Tél. :- 07.81.30.09.80 / 06.98.48.86.16 / 06.61.18.95.30
ஞாயிறு மாலை 5.00 மணிக்கு தமிழ் ஆராதனை

**Main Contact : 06.61.18.95.30 / 07.63.17.68.99**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
**திரு. செல்லையா சௌந்தரராஜா**
**(சவுந்தி)**
(பிரான்ஸ்)
தோற்றம் : 19.07.1949
மறைவு : 16.11.2018



அமரர்
**திருமதி. இளையதம்பி நாகம்மா**
(இலங்கை)
தோற்றம் : 10.08.1934
மறைவு : 19.11.2018



அமரர்
**திரு. இராஜகோபாலப்பிள்ளை அம்பிகைநேசன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 10.05.1969
மறைவு : 22.12.2018



அமரர்
**திரு. துரைராஜா ரகுகுணராசா**
(பிரான்ஸ்)
தோற்றம் : 08.03.1969
மறைவு : 11.11.2018



அமரர்
**திரு. சபாரெத்தினம் ஜெயபாஸ்கரன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 10.05.1972
மறைவு : 30.11.2018



அமரர்
**திரு. நடராஜா சுகிர்தராஜா**
**(ராஜா மாஸ்டர்)**
(பிரான்ஸ்)
தோற்றம் : 08.06.1933
மறைவு : 24.12.2018



அமரர்
**திருமதி. செல்வமலர் விஜயகாந்தன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 30. 05. 1963
மறைவு : 14. 11. 2018




அமரர்
**திருமதி. ஜெகநாதன் கமலாதேவி**
**(கமலா)**
(பிரான்ஸ்)
தோற்றம் : 15.11.1957
மறைவு : 16.12.2018



அமரர்
**செல்வன். செல்வேந்திரன் அட்சயன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 19.10. 2003
மறைவு : 21.12. 2018



அமரர்
**திரு. சின்னத்துரை கனகலிங்கம்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 02.02.1946
மறைவு : 24.11.2018



அமரர்
**திரு. கிருஷ்ணர் பொன்னையா**
(பிரான்ஸ்)
தோற்றம் : 23. 02. 1932
மறைவு : 03. 12. 2018



அமரர்
**திரு. இராமச்சந்திரன் நேசலிங்கம்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 30. 08. 1944
மறைவு : 18. 12. 2018



அமரர்
**திரு. சிமியோன் தார்சீசியஸ் தேவதாசன்**
**(தேவன்)**
(பிரான்ஸ்)
தோற்றம் : 27.08.1962
மறைவு : 04.01.2019



அமரர்
**திருமதி. லில்லி சண்முகநாதன்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 30.11.1936
மறைவு : 31.12.2018



அமரர்
**சிவ ஸ்ரீ பரமசாமிக்குருக்கள் சிவஞானசுப்பிரமணிய சர்மா**
(பிரான்ஸ்)
தோற்றம் : 21.10.1934
மறைவு : 10.01.2019



அமரர்
**திரு. க.கெங்கராஜா**
(பிரான்ஸ்)
தோற்றம் : 04.08.1964
மறைவு : 05.01.2019



அமரர்
**திரு. இராசையா ஈஸ்வரமூர்த்தி**
(பிரான்ஸ்)
தோற்றம் : 31. 03. 1962
மறைவு : 28. 11. 2018



அமரர்
**திரு. வல்லிபுரம் சண்முகம்**
(பிரான்ஸ்)
தோற்றம் : 19. 03. 1930
மறைவு : 03. 01. 2019



## Mc டொனால்ட் 'Big Mac' என்னும் பெயரை ஐரோப்பாவில் பயன்படுத்த முடியாது!


– ஐரோப்பிய வர்த்தகக் குறி (Trade mark) பதிவு மையம்

1978ம் ஆண்டு உருவான Supermac's துரித உணவகம் இன்று 106 துரித உணவகங்களுடன் மக் டொனால்ட்டை விடப் பிரபலமாக அயர்லாந்தில் கோலாச்சி வருகின்றது. supermac's உணவகத்தினர் அயர்லாந்தை விட்டு வெளியே ஐரோப்பிய நாடுகளில் காலெடுத்து வைக்க எத்தனிக்கையில் Mc டொனால்ட் தனது முதலாவது வழக்கைப் பதிவு செய்தது. Supermac's தனது பெயரை மாற்ற வேண்டும். பல சான்ட்விச்சுகளுக்கு எம்மைப் போன்றே பெயர்கள் வைத்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

Supermac's உணவகமோ Mc டொனால்ட் எமது வளர்ச்சியை ஐரோப்பாவுக்குள் வளரவிடாமல் தடுப்பதற்காகவே பல சான்ட்விச்களின் பெயரை எமது உணவகத்துடன் ஒத்த பெயர்களாக வைத்து எம்மைத் தடுத்து வருகின்றனர் என மீண்டும் வழக்கை மீள்பரிசீலனை செய்யக் கோரினர்.

மீள்பரிசீலனையின் அடிப்படையில் 15 ஜனவரி 2019ல் L'EUIPO (l'union européenne pour la propriétér interlectuelle) பெயர்பதிவு ஆய்வு மையம் தீர்ப்பை வழங்கியுள்ளது. மக்டொனால்ட்டும் Supermac's உணவுடன் ஒத்த பெயர்களைக் கொண்ட சான்ட்விச்களின் பெயர்களை மாற்ற வேண்டும். அவற்றில் குறிப்பாக 'Big Mac' எனத் தெரிவித்துள்ளனர்.

மக்டொனால்ட் உடனடியாக எந்தவித எதிர்ப்புகளையும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் நிச்சயம் மேல்முறையீடு செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
மக்டொனால்ட் உலகெங்கும் ஒரு நாளுக்கு 69 மில்லியன் வாடிக்கையாளர்களுடன், 119 நாடுகளில் 36258 உணவகங்களுடன் இயங்கி வரும் தவிர்க்க முடியாத பாரிய அமெரிக்க நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.



## எதிர்பார்ப்புகளே வேதனைகளைத் தருகின்றன...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாலியல் துன்புறுத்தல் முறைப்பாடுகளை வழங்க இணையத்தளம்

பாலியல் தாக்குதல்கள் மற்றும் துன்புறுத்தல் தொடர்பாக உடனுக்குடன் முறைப்பாடுகளை வழங்க இணையத்தள பக்கம் ஒன்று பிரான்ஸ் அரசு தரப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உள்துறை அமைச்சர் **Gerard Collomb**, கடந்த மார்ச் மாதத்தில் இந்த இணையத்தளம் தொடர்பாக அறிவித்திருந்தார். 24 மணிநேரமும் இயங்கும் இத்தளத்தினூடாக சிறப்பு பொலிஸ் அதிகாரி யுடன் உரையாடவும், முறைப்பாடுகளை வழங்கவும் முடியும்.

service-public எனும் அரச இணையத்தளத்தில் புதிய பக்கம் உருவாக்கப்பட்டு அதனூடாக முறைப்பாடுகள் பதிவுசெய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.




## 80 சதவீதமான பிரான்ஸ் மக்களின் வீட்டுவரி (Taxe d'habitation) 2020ம் ஆண்டிற்கு முன்னர் முற்றிலுமாக நிறுத்தப்படும்!

முதற்கட்டமாக 30 சதவீதம் குறைக்கப்படும், 2020ல் முற்றிலுமாக இல்லாமல் போகும். மீதமுள்ள 20 சதவீதத்தினர் பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் இருப்பவர்கள். இவர்கள் வீட்டுவரி கட்ட வேண்டும் என்பதே ஆரம்பத்திட்டமாகும்.

அண்மையில் அதிபர் இந்த 20 சதவீதத்தினருக்கு வரிவிலக்கு வழங்கும் திட்டத்தை முன்வைத்தார். இத்திட்டம் அரசியலமைப்புச் சபையால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. நீண்ட விவாதங்களுக்குப் பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது என பொருளாதார அமைச்சர் Bruno Le Maire தெரிவித்துள்ளார். இத்திட்டம் கைவிடப்படுவதற்கான முக்கிய காரணம் மஞ்சள் சட்டைப் போராட்டமாகும்.

பணக்காரர்களின் வீட்டுவரி ரத்துத் திட்டத்தைக் கைவிடு வதன் மூலம் அரசு இரட்டை நன்மைகளை அடையமுடியும்.
1. மஞ்சள் சட்டைப் போராட்டக்காரர்களின் கோஷத்தைக் குறைக்க முடியும்
2. அரசு 8 மில்லியார்ட் யூரோக்களை சேமிக்க முடியும்.
எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.
80 சதவீதமக்களின் வரிவிலக்கு மூலம் அரசு 10 மில்லியாட் யூரோக்களை மட்டுமே இழக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

லாச்சப்பலில் சங்கீதா அச்சகம்



## அணுசக்தி பயன்பாட்டை 50 வீதம் குறைப்போம்!

– பிரான்ஸ் அதிபர்

சக்திவள உற்பத்தியில் அணுசக்தியின் பங்களிப்பை பிரான்ஸ் 50 வீதத்தால் குறைக்குமென ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தமது தற்போதைய ஆட்சிக்காலத்திற்குள், அதாவது எதிர்வரும் 2022ஆம் ஆண்டுக்குள் இரண்டு அணு உலைகளை மாத்திரமே மூட முடியுமென தேசிய ஆற்றல் மூலோபாயம் தொடர்பான தொலைக்காட்சி செவ்வியொன்றில் ஜனாதிபதி மக்ரோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2035 ஆம் ஆண்டுக்குள் தமது இலக்கை அடையலாம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி மக்ரோன் ,பிரான்ஸின் பொருளாதார மற்றும் நட்பு நாடான ஜேர்மனி அணுசக்தியை முற்றாக கைவிட முயற்சித்து வருகின்ற போதும், தமது நாடு முற்றாக கைவிடும் எண்ணம் கிடையாதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அணுசக்தியை முற்றாக கைவிடும் வாக்குறுதியில் தாம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படவில்லை. ஆயினும் தற்போது 75 வீத பயன்பாட்டில் காணப்படும் அணுசக்தியை 50 வீதமாக குறைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**பிரான்ஸ் கல்விமுறையில்**
மாணவர்கள் 3ème படிக்கும் போது 1 வாரம் Stage செய்ய வேண்டும். அதாவது ஒரு கடையிலோ ஒரு நிறுவனத்திலோ சென்று Stage செய்வதன் ஊடாக வேலை நிறுவனம் எவ்வாறு இயங்குகிறது? அங்கு எவ்வாறு வேலை செய்கிறார்கள்? அதில் உள்ள பிரச்சனைகள் என்ன? என்பன தொடர்பாக அவர்கள் பல அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்காக இத்திட்டம் உள்ளது.

இவ்வாறு Stage எடுப்பது கடினமாக இருக்கும் 93 பகுதி மாணவர்களுக்காக http://monstagede3e.seine-saint-denis.fr என்ற இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
இந்த இணையத்தளத்திற்குச் சென்று மாணவர்கள் தங்கள் விபரங்களை பதிவு செய்வதனூடாக பயன் அடையலாம்.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப பாடசாலை மாற்றங்களில் அதிக கவனம் செலுத்தும் கல்வி அமைச்சர்



**பரீட்சை மதிப்பீடுகள் மாணவரை நெறிப்படுத்துவதற்கே! அவர்களை பின்தள்ளுவதற்கல்ல !**

**கல்வித்துறை** அமைச்சர் Jean michel Blanquer னால் அறிவிக்கப்பட்ட மாற்றங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. எனது கூடுதல் கவனம் ஆரம்பப்பாடசாலை மாற்றங்களிலேயே செறிந்துள்ளது என்கிறார் அமைச்சர்.

ஆரம்ப பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் கல்வித்தரம் பற்றிய அவதானிப்பு முக்கியமானது. அதன் பிற்பாடே மாணவர்களின் அல்லது அந்த வகுப்பின் தேவைகளுக்கேற்ப மாற்றங்களைச் சரிவரச் செய்ய முடியும் என அமைச்சர் மேலும் தெரிவிக்கிறார்.

இதற்கேற்ப CP மற்றும் CE1 மாணவர்களுக்கு தேசிய அளவி லான தரம் அறியும் பரீட்சை நடாத்தப்பட்டது வருட ஆரம்பத்தில் இத்தகைய பரீட்சையை நடாத்துவதன் மூலம் மாணவர்களின் கல்வித்தரத்தை ஆசிரியர்களால் அறியக்கூடியதாக விருக்கும். மாணவர்களின் மதிப்பீடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாணவனுக்கும் என்ன தேவைப்படுகின்றதோ அதற்கேற்ப நெறிப்படுத்தப்படுவர்.

செப்டம்பர் மாதம் முதல் முறையாக நடாத்தப்பட்ட பரீட்சையின் இறுதியில் கீழ்வரும் புள்ளிகளை அவதானிக்கக் கூடியதாகவிருந்ததாக அமைச்சரின் அறிக்கை தெரிவிக்கிறது.

- CP வகுப்புகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களில் 23 சதவீத மான மாணவர்கள் அகரவரிசை எழுத்துக்களைச் சரியாக அறியாதவர் களாகவும் அவை எழுப்பும் சத்தங்கள் என்ன என்று தெரியாதவர்களாகவும் உள்ளனர்.

- 8 சதவீதமானவர்கள் இலக்கங்களை எழுதத் தெரியாதவர்களாகவுள்ளனர்.

- CE1 மாணவர்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் ஒரு நிமிடத்திற்கு 30 இற்குக் குறைவான சொற்களையே வாசிக்கின்றனர். CE1 மாணவனுக்கு நிமிடத்திற்கு 50 சொற்களாக இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

- இரண்டில் ஒருவர் (49 சதவீதத்தினர்) மனக்கணக்கில் மிகவும் குறைவான நிலையிலும் 47 சதவீதமானவர்கள் சிறுதானக்கூட்டல் கழித்தல் கணக்குகள் கூட தெரியாதவர்களாகவும் உள்ளனர்.

ஒரு மாணவனின் இத்தகைய பின்தங்கிய நிலைக்கு மாணவனினது சமூக மற்றும் குடும்ப நிலையே முக்கிய காரணமாகும் எனக் கல்வித்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மிகவும் பின்தங்கிய நிலையில் அல்லது வீட்டில் வேறு மொழி பேசும் குடும்பத்திலிருந்து வரும் ஒரு 4 வயது குழந்தை வீட்டில் பிரெஞ்சு மொழி பேசும் குடும்பத்திலிருந்து வரும் குழந்தையிலும் பார்க்க 30 மில்லியன் சொற்களை குறைவாக அறிந்தவர்களாகவுள்ளனர். இந்த ஏற்றத்தாழ்வுகளை பாடசாலைகளே ஈடுசெய்ய வேண்டும். பின்தங்கிய நிலையிலிருக்கும் மாணவனுடன் உறுதுணையாக இருக்க வேண்டும். ஒரு மாணவனையும் ஒதுக்கி வைக்கக்கூடாது.

ஆசிரியர்களுக்கு கற்பித முறைகள் தொடர்பான செயற்திட்டம் வழங்கப்படும். இருப்பினும் அவர்கள் தமது கற்பித முறைகளுக்கு ஏற்ப சுதந்திரமாகவும் செயற்பட முடியும். சரியான அணுகு–முறைகளால் மாணவர்களின் அடிப்படைச்சிக்கல்கள் களையப்பட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தரம் அறியும் பரீட்சை முறைக்கு சில ஆசிரியர் அமைப்புளால் எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப்பரீட்சைகள் கல்வித்துறை மற்றும் வெவ்வேறு துறை நிபுணர்களின் நீண்ட ஆய்வுகளுக்குப் பின்னர் தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பரீட்சை மதிப்பீடுகள் மாணவனை பின்தள்ளுவதற்கு அல்ல, அவனை நெறிப்படுத்துவதற்கே! என அமைச்சர விளக்கம் அளித்துள்ளார்.












**உங்கள் நண்பர்களே உங்களை வடிவமைக்கிறார்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## Prime d'activité

### உதவித்தொகை

CAF அமைப்பு மூலமாக SMIC சம்பளம் அல்லது அதைவிட சற்று கூடுதலாக வருமானம் பெறுபவர்களுக்கு la Prime d'activité என்ற உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. சமீபத்தில் நடைபெற்ற மஞ்சள் மேலாடை போராட்டத்தை தொடர்ந்து இந்த உதவி தொகை பெறுவதற்கான சில வருமான வரம்புகள் மாற்றப்பட்டுள்ளன.

இதனால் புதிதாக ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இந்த உதவி தொகை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்களுக்கு இந்த தொகை கொடுக்கப்படவில்லை எனில் நீங்கள் CAF இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்கலாம். அதற்கு முன்பாக உங்களுக்கு இந்த உரிமை உள்ளதா என்பதை CAF இணையத்தளத்தில் பரிசோதித்துப் பார்க்கலாம்.

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி – இல. 39



அஞ்சலி நடித்த திரைப்படம் ( 7)
2. சாவி (4)
3. ரவிந்திரநாத் தாகூரின் கவிதைத் தொகுப்பு ( 5)
4. செயலாளரை இவ்வாறும் அழைக்கலாம் (தலைகீழாக உள்ளார்) ( 6)
8. வயதானவன் ( 4)
10. இந்தப்பல் வைத்த ஆபரணங்களும் அணிவர் (5)
11. தீராப்பகை குழம்பியுள்ளது (4 )
12. தத்துவவாதி சொல்வது கீழிலிருந்து மேலாக குழம்பிக்கிடக்கிறது ( 5)
14. அன்பு (3)

**இடமிருந்து வலம்**

1. கீரை வகைகளில் ஒன்று (7)
5. சந்நியாசியை இவ்வாறும் அழைக்கலாம். (3)
6. மனைவி (குழம்பியுள்ளாள்) (3)
7. போகன்விலா எனவும் அழைக்கலாம் (5)
9. பூஞ்சணம் ( 3)
13. நெல்சன் மண்டேலாவின் நாடு ( 8)
15. தமிழ்ப்படங்களை பகடி செய்து வெளியான சிவா நடித்த திரைப்படம் ( 7) மாறியுள்ளது
16. கடிதம் என்றும் சொல்லலாம் ( 3)

**மேலிருந்து கீழ்**

1. 2010 வசந்தபாலனின் இயக்கத்தில் வெளியான

✔ உங்கள் பதில்களை 10 பங்குனி 2019 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

**நிலா குறுக்கெழுத்துப்போட்டி – 38**

**வெற்றியாளர் :**

- சுபா குருபரன் Torcy
- ஜெயமோகன் நிலானி Montmagny
- ஜனகன் ஜெயராஜ் Paris 11

**சரியான விடை எழுதியோர் :**

| | |
|---|---|
| விஜிதா ஜோசப் | Argenteuil |
| ஜோர்ஜன் ஜோசப் | Argenteuil |
| கனகா நாகராஜன் | Bussy Saint George |
| தர்மகுணம் சிவமணி | Gonesse |
| இந்திரகுமார் விதூசன் | Annieres Sur Seine |
| இந்திரகுமார் நிவேதா | Annieres Sur Seine |
| இந்திரகுமார் ஜனுசன் | Annieres Sur Seine |
| தாவீது ஞானசிங்காரம் | Le Blanc Mesinil |
| ராதா கனகராஜா | Aulnay Sous Bois |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org